
# DHEERAN IAS ACADEMY

# பொது அறிவுக் களஞ்சியம்


## நடப்பு நிகழ்வுகள்
## மார்ச் - 2024













# நடப்பு நிகழ்வுகள் – மார்ச் 2024

## தமிழ்நாடு

- நீங்கள் நலமா
  - நீங்கள் நலமா – 06.03.2024
  - முதலமைச்சர் உள்பட அமைச்சர்கள், தலைமை செயலா ளர்கள், மாவட்ட கலெக்டர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் மக்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு கருத்துகளை கேட்க நீங்கள் நலமா எனும் திட்டம் தொடங்கப்பட உள்ளது.




- நாட்டின் மின்னணு பொருட்கள் ஏற்றுமதியில் தமிழ்நாடு முதலிடம் பிடித்துள்ளது.

- காவளாப்பட்டி, சில்லத்தூர், திருநெல்லூர், வங்கரை ஆகிய குறுவட்டங்களையும், 45 வருவாய் கிராமங்களையும் உள்ளடக்கி திருவோணம் தாலுகா உருவாக உள்ளது.

- அரக்கோணம், நெமிலியை அடுத்த கீழ்வீதி ஊராட்சியின் பெரிய ஏரிக்கரையில் 13ம் நூற்றாண்டைச் சேர்ந்த பிற்கால சோழர் கால துர்கை சிற்பம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

- புதுமைப் பெண் திட்டத்தால் உயர்கல்வி மாணவர்கள் சேர்க்கை 34% அதிகரித்துள்ளது என தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.
  - இத்திட்டம் சமூக நலன், மகளிர் உரிமைத்துறை சார்பில் மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது.
  - இத்திட்டத்தின்படி 6 முதல் 12 வரை படித்து உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு ரூ.1000 வழங்கும் திட்டமாகும்.

- தூய்மை பணியாளர்களை தொழில் முனைவோர்களாக மாற்றும் திட்டத்தினை தமிழக முதல்வர் தொடங்கிவைத்தார்.
  - தூய்மைப் பணியாளர்கள் சொந்தமாக கழிவுநீர் அகற்றும் ஊர்தி வாங்குவதற்கு கடன் உதவி வழங்கப்பட உள்ளது.
  - அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ் பட்டியலினத்தவருக்கும், பழங்குடியினருக்கும் 50% மானியமும், இதர பிரிவினருக்கு 40% மானியம் வழங்கப்படுகிறது.



- கடல்சார் உயர் இலக்கு படை
    - தமிழக அரசு சார்பில் இராமநாதபுரத்தில் இந்தியாவில் முதன் முறையாக கடல்சார் உயர் இலக்கு படை உருவாக்கப்பட்டது.
    - மன்னார் வளைகுடா மற்றும் பால்க் ஜலசந்தியில் உள்ள கடல் வளங்கள் மற்றும் கடல் பல்லுயிர்களை பாதுகாக்க இப்படை உருவாக்கப்பட்டது.

- கனவு இல்லம் திட்டம்
    - எழுத்தாளர்களுக்களுக்கான கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ம.ராஜேந்திரன், இந்திரா பார்த்த சாரதி ஆகியோருக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளது.
    - கனவு இல்லம் திட்டம் – 03.06.2021

- மலை மேலிடப் பயிற்சி மையம்
    - ஊட்டியில் மலை மேலிடப் பயிற்சி மையம் தொடங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாட்டில் புதிதாக புதுக்கோட்டை, நாமக்கல், திருவண்ணாமலை, காரைக்குடி ஆகிய நான்கு மாநகராட்சிகள் உருவாக்கப்பட்டுள்ளன.
    - 1988 நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்ட திருத்தத்தின் படி 21ஆக இருந்த மாநகராட்சிகளின் எண்ணிக்கையானது தற்போது 25 ஆக உயர்ந்துள்ளது.

- 250 ஆண்டுகளாக செயல்பட்டு வரும் இந்தியாவின் முதல் தபால் நிலையம்
    - 1774-ஆம் ஆண்டு அப்போதைய வங்க மாகாண கவர்னர் ஜெனரல் வாரன்ஹேஸ்டிங்ஸ் கொல்கத்தாவில் வைத்த இந்தியாவின் முதல் தபால் நிலையம் 250 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.
    - 1773-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட புதிய சட்டத்தின் கீழ் வங்கத்தின் முதல் கவர்னர் ஜெனரலாக வாரன் ஹேஸ்டிங்ஸ் நியமிக்கப்பட்டார். அவரது பதவிக்காலத்தில் இந்தியாவில் முதல் தபால் நிலையம் அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

- திருச்சி ராச்சாண்டார் திருமலையில் உள்ள வீரைச்சிலை ஆண்டவர் கோயிலில் சோழர் கால கல்வெட்டுகள் இரண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒன்று நிலப்பதிவு தொடர்பானது மற்றொன்று கோவிலுக்கு வழங்கப்பட்ட வரிவிலக்கு தொடர்பானது.

## இந்தியா

- உத்திரப்பிரதேசத்தின் கான்பூரில் அதானி குழுமத்தால் உருவாக்கப்பட்ட தெற்காசியாவின் மிகப்பெரிய முதல் வெடிமருந்து ஏவுகணை தயாரிப்பு வளாத்தினை உத்திரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்தியநாத் தொடங்கி வைத்துள்ளார்.
    - இது நாட்டின் முதல் வெடிமருந்து ஏவுகணை தயாரிப்பு வளாகமாகும்.

- இந்தியாவில் சிறுத்தைகளின் எண்ணிக்கை 2022-ஆம் ஆண்டு நிலவரப்படி 13,874-ஆக உயர்ந்துள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் பூபேந்திர யாதவ் தெரிவித்துள்ளார்.

- தேசிய புலிகள் பாதுகாப்பு அமைப்பு (NTCA) மற்றும் இந்திய வனவிலங்கு நிர்வாகம் (WII) இணைந்து இக்கணக்கெடுப்பை நடத்தியுள்ளது.
- NTCA – National Tiger Conservation Authority – 2005
- WII – Wildlife Institute of India -1982
- மாநிலங்கள் அளவில் எண்ணிக்கை
    - முதலிடம் – மத்தியப்பிரதேசம் (3907)
    - இரண்டாம் இடம் – மகாராஷ்டிரா (1985)
    - மூன்றாம் இடம் – கர்நாடகா (1879)
    - நான்காம் இடம் – தமிழ்நாடு (1070)



➢ இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் எரிபொருள் படகு சேவையானது கொச்சியில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

➢ 18 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு ரூ.1000 வழங்கும் 'முக்கிய மந்திரி மஹிளா சம்மன் யோஜனா' திட்டமானது டெல்லியில் தொடங்கப்பட்டுள்ளது.
- கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் – 15.09.2023

➢ ADITI திட்டம்
- பாதுகாப்பு துறைகளில் தொழில் நுட்பத்தை மேம்படுத்த ADITI திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- தில்லியில் நடைபெற்ற பாதுகாப்பு இணைப்பு 2024 நிகழ்ச்சியில் இத்திட்டம் தொடங்கப்பட்டது.

➢ 5கோடி ஆயுஷ்மான் கார்டுகளை உத்திரப்பிரதேச மாநிலம் வழங்கியுள்ளது.
- பிரதமரின் ஆயுஷ்மான் திட்டம் (மக்கள் ஆரோக்கிய திட்டம்) – 2018

➢ நாடாளுமன்றம், சட்டப்பேரவைகளில் வாக்களிக்கவோ அல்லது குறிப்பிட்ட தகவலை பேசவோ உறுப்பினர்கள் லஞ்சம் பெறுவது குற்றத்தண்டனை என உச்சநீதிமன்ற அமர்வு தெரிவித்துள்ளது. மேலும் சட்ட பாதுகாப்பு கிடையாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றவியல் சட்ட பாதுகாப்பு விதி – 105(2)
- சட்டமன்ற உறுப்பினர்கள் குற்றவியல் சட்ட பாதுகாப்பு விதி – 194(2)

➢ தேசிய ஆராய்ச்சியாளர்கள் உச்சி மாநாடு 2024 சென்னை ஐஐடி-யில் நடைபெறுகிறது.

➢ சட்ட பாதுகாப்பு விதி
- நாடாளுமன்றம், சட்டப்பேரவைகளில் வாக்களிக்கவோ அல்லது குறிப்பிட்ட தகவலை பேசவோ உறுப்பினர்கள் லஞ்சம் பெறுவது குற்றத்தண்டனை என உச்சநீதிமன்ற

அமர்வு தெரிவித்துள்ளது. மேலும் சட்ட பாதுகாப்பு கிடையாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றவியல் சட்ட பாதுகாப்பு விதி – 105(2)
- சட்டமன்ற உறுப்பினர்கள் குற்றவியல் சட்ட பாதுகாப்பு விதி – 194(2)

➢ இந்திரம்மா வீட்டுத் திட்டம்

- தெலுங்கானாவில் வீடுகட்ட இந்திரம்மா வீட்டுத் திட்டமானது தொடங்கப்பட்டுள்ளது.
- கலைஞர் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் 2030க்குள் 8 லட்சம் வீடுகள் கட்டப்பட உள்ளது.
- பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா (கிராமின்)
    - இத்திட்டத்தில் 60% விழுக்காடு மத்திய அரசு நிதி 40% விழுக்காடு மாநில அரசு நிதி என்ற விகிதத்தில் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இது ஒரு மத்திய அரசு திட்டமாகும்.
    - ஊரக பகுதியில் 2022-க்குள் வீடுகள் இல்லாதவர்களுக்கும் மற்றும் பழுதடைந்த வீடுகளுக்கு பதிலாக புதிய வீடுகள் கட்டி தருவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

➢ மக்களவைத் தேர்தல்



- இந்தியாவின் 18வது மக்களவைத் தேர்தலானது 543 தொகுதிகளில் நடைபெற உள்ளது.
- சுதந்திர இந்தியாவின் முதல் மக்களவைத் தேர்தலானது 1951-52 ஆண்டுகளில் 489 தொகுதிகளில் நடைபெற்றது.
- cVIGIL – வாக்களிக்கப்தற்காக பணம் வழங்குதலை தடுக்க தொடங்கப்பட்ட செயலி

➢ போலியோ

- 2004-ல் தமிழக்தில் போலியோ இல்லா நிலை உருவானது.
- உலகப் போலியோ தினம் ஆண்டுதோறும் அக்டோபர் 24 ஆம் தேதி போலியோ நோயின் அபாயங்களைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.
- இளம் பிள்ளை வாதம் எனும் போலியோ நோய்க்கு எதிராக முதல் வெற்றிகரமான தடுப்பூசியைக் கண்டுபிடித்தவர் ஜோனஸ் சால்க்
- உலகளாவிய போலியோ ஒழிப்புத் திட்டம் (GPEI) 1988 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது.
- போலியோமியெலிட்டிஸ் (Poliomyelitis) வைரஸ் கிருமியால் உண்டாகும் போலியோ நோய் ஐந்து வயதுக்கு குறைவான குழந்தைகளை அதிகம் தாக்குகிறது.

➢ சிவில் விமான போக்குவரத்து ஆராய்ச்சி அமைப்பு

DHEERAN IAS ACADEMY

- இந்தியாவில் முதன் முறையாக ஹைதரபாத் பேகம்பேட் விமான நிலையத்தில் சிவில் விமான போக்குவரத்து ஆராய்ச்சி அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.
- விமானத்துறை பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ள இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

➢ இ-சான் உபஜ் நிதி – இணையம்

- விளைபொருள்களை அடகு வைத்து விவசாயிகள் கடன் பெற இ-சான் உபஜ் நிதி இணைய தளம் உருவாக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ் 7% வட்டி விகிதத்தில் விவசாயிகளால் எளிதில் கடன் பெறலாம்.

➢ மேற்கு வங்கத்தின் கல்கத்தா மற்றும் ஹவுரா நகருக்கு இடையே ஹுக்ளி நீருக்கடியில் மெட்ரோ சேவையானது தொடங்கப்பட்டுள்ளது.

- இச்சேவை ஹுக்ளி ஆற்றின் இடையே 520மீ தொலைவில் 32மீ ஆழத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
- இந்த வழித்தடம் எஸ்பிளனேட் மற்றும் ஹௌரா மைதான இரயில் நிலையங்களை இணைக்கிறது.

➢ மாநிலங்கள் முக்கியத்துறைகளில் சிறந்த திட்டங்களை வகுக்க NITI for States என்ற புதிய தகவல் தளத்தை மத்திய அரசு அறிமுகம் செய்துள்ளது.

- ஒவ்வொரு மாநிலமும் ஏனைய மாநிலங்களின் போக்குகளை அறிந்து கொள்ளவும், தங்கள் மாநிலத்தில் கொள்கைகளை உருவாக்குவதற்கும் இந்த தளம் உதவுதாக நிதி ஆயோக் (NITI Aayog) தெரிவித்துள்ளது.
- NITI Aayog – 01.01.2015

DHEERAN IAS ACADEMY

➢ வேலையின்மை விகிதம்

- 2023ஆம் ஆண்டில் இந்தியாவில் 15 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்களுக்கான வேலையின்மை 3.1%மாக குறைந்துள்ளதாக தேசிய மாதிரி கணக்கெடுப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.
- தேசிய மாதிரி கணக்கெடுப்பு அமைப்பு புள்ளி விவர அறிக்கையின் கீழ் செயல்படுகிறது.
- 2022-ல் வேலையின்மை விகிதம் – 3.6%
- 2021-ல் வேலையின்மை விகிதம் – 4.2%



➢ கெவ்ரா நிலக்கரி சுரங்கம்

- ஆசியாவின் மிகப்பெரிய நிலக்கரி சுரங்கமாக கெவ்ரா நிலக்கரி சுரங்கம் மாற உள்ளது.
- சத்திஸ்கரிலுள்ள இச்சுரங்கத்தினை சவுத் ஈஸ்டர்ன் கோல்ஃபீலட்ஸ் லிமிடெட் இயக்குகிறது.

- கெவ்ரா நிலக்கரி சுரங்கத்தின் தற்போது உற்பத்திறன் 52.5 மில்லியன் டன்னாக இருந்து 70 மில்லியன் டன்னாக உயர்ந்துள்ளது.

➢ இன்ஃபோசியஸ் நிறுவனர் நாராயண மூர்த்தியின் மனைவி சுதா மூர்த்தி மாநிலங்களவை நியமன உறுப்பினராக குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்டுள்ளார்.



- இவர் அரசிலமைப்பு விதி 80(3)ன் படி நியமிக்கப்பட்டுள்ளார்
- இவர் 2006-ல் பத்மஸ்ரீ விருதும், 2023 பத்மபூஷண் விருதும் பெற்றுள்ளார்.
- கலை, இலக்கியம், அறிவியில் மற்றும் சமூக சேவையில் சிறந்து விளங்கியதற்காக மாநிலங்களையில் 12 பேரை உறுப்பினராக நியமிக்கிறார்.
- மாநிலங்களை உறுப்பினர் – 6 ஆண்டு பதவிக்காலம்

➢ தேர்தல் ஆணையர் அருண்கோயல் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

- அருண்கோயல் தனது ராஜினாமா கடிதத்தை குடியரசுத்தலைவரிடம் கொடுத்துள்ளார்.

➢ நிகழாண்டின் முதலாவது தேசிய லோக் அதாலத் அமர்வில் 1.13 கோடி வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

- லோக் அதாலத் (எ) மக்கள் நீதிமன்றம் பேச்சவார்த்தை மூலம் மக்களின் பிரச்சனைகளை தீர்க்க மத்திய அரசால் உருவாக்கப்பட்ட நீதிமன்றம் ஆகும்.
- குஜராத், ஜூனகாரில் மார்ச் 14, 1982-ல் லோக் அதாலத் நடந்தது

➢ இந்தியாவின் முதல் முறையாக கேரள மாநிலமானது தனக்கான ஓடிடி தளத்தினை தொடங்கியுள்ளது.

- இதற்கு சி-ஸ்பேஸ் ஓடிடி (C-SPACE) தளம் பெயரிடப்பட்டுள்ளது.

➢ இளைஞர்களுக்கான தொழில்முனைவோர் திட்டமான MYUVA திட்டம் உத்திரப்பிரதேசத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

➢ கிராமங்களில் மருத்துவ சேவை பரவலாக கிடைக்க மத்திய அரசு இ ஸ்மார்ட் கிளினிக் திட்டமானது தொடங்கியுள்ளது.

- இத்திட்டமானது உன்னத பாரத் அபியான் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது.
- இதற்காக மத்திய அரசு லார்ட்ஸ் மார்க் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

➢ மோசடி அழைப்புகள் மற்றும் குறுஞ்செய்திகள் பற்றி புகார் அளிக்க சக்ஷு தளம் (Chakshu) என்னும் தளமானது உருவாக்கப்பட்டுள்ளது

DHEERAN IAS ACADEMY

- அருணாச்சல பிரதேசத்தில் 13,000 அடி உயரத்தில் உலகின் மிக நீளமான இருவழி சுரங்கப்பாதை திறக்கப்பட்டுள்ளது.
    - இச்சுரங்கப்பாதையானது அஸ்ஸாமின் தேஜ்பூர் முதல் அருணாச்சல பிரதேசத்தின் நவாங் பகுதிகள் இடையிலான சேலா பாஸ் பகுதியில் அமைந்துள்ளது.
    - இப்பாதையானது எல்லைகள் சாலைகள் அமைப்பு சார்பில் துவங்கப்பட்டுள்ளது.
    - எல்லைகள் சாலைகள் அமைப்பு : 07.05.1960

- குடியுரிமை திருத்தச் சட்டம்
    - 2019-ல் ஒப்புதல் பெறப்பட்ட குடியுரிமை திருத்தச் சட்டம் 4 ஆண்டுகளுக்கு பிறகு குடியுரிமை திருத்த விதிகள் 2024 என்ற பெயரில் நிறைவேற்றப்பட்டுள்ளது.
    - 2014 டிசம்பர் 31க்கு முன்னர் வங்கதேசம், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து இந்தியாவிற்குள் புலம்பெயர்ந்த முஸ்லீம் அல்லாத சிறுபான்மையினருக்கு குடியுரிமை வழங்கப்பட உள்ளது.

- ட்ரேன்கள் வழங்கல்
    - தில்லி, இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தில் விவசாய பணிகளில் ஈடுபட்ட 1000 பெண்களுக்கு ட்ரோன்கள் வழங்கப்பட்டுள்ளது.
    - நமோ ட்ரேனா சகோதரிகள் திட்டம் (2022) – விவசாய பணிகளில் ஈடுபடும் பெண்களுக்கு ட்ரோன்கள் வழங்கல்

- ஆயுத இறக்குமதி பட்டியல்
    - ஆயுத இறக்குமதி பட்டியலில் இந்தியா முதலிடம் பிடித்துள்ளது.
    - 2வது இடம் – சவுதி அரேபியா
    - 3வது இடம் – கத்தார்

- பசுமை நகராட்சி பத்திரம்
    - குஜராத்தின் வதோதரா நகராட்சி பசுமை நகராட்சி பத்திரத்தை வெளியிட்டுள்ளது.
    - இது ஆசியாவின் முதல் பசுமை நகராட்சி பத்திரம் ஆகும்.

- மொரிஷியஸ் பல்கலைக்கழகம் இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு-வுக்கு கௌரவ டாக்டர் வழங்கியுள்ளது.
    - குடியரசுத்தலைவர் மொரிஷியஸில் வாழும் 7வது தலைமுறை இந்திய வம்சாவளியினருக்கு ஓசிஐ (OCI) அங்கீகாரம் வழங்கப்பட உள்ளதாக தெரிவித்துள்ளார்.
    - OCI – வெளிநாட்டு இந்திய குடியுரிமை

- பாரதி சக்தி போர் பயிற்சி
    - இந்தியாவின் முப்படைகள் இணைந்து பாரதி சக்தி போர் பயிற்சி நடத்தியுள்ளது.

- இப்பயிற்சியானது ராஜஸ்தானின் பொக்ரானில் நடத்தப்பட்டுள்ளது.

➢ சுதந்திர இந்தியாவின் முதல் பொது சிவில் சட்டத்தை கொண்டு வந்துள்ள உத்தரகாண்ட்டின் மசோதாவிற்கு குடியரசுத்தலைவர் ஒப்புதல் அளித்துள்ளார்.
- அரசமைப்பு சட்டப்பிரிவு 201ன் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டது.

➢ உலக பொருளாதார மன்றத்தின் செயற்கை நுண்ணறிவு (AI) மையமானது கர்நாடகத்தில் துவங்கப்பட உள்ளது.
- முதல் AI நகரம் – லக்னோ
- முதல் AI பள்ளி – கேரளா
- முதல் AI ஆசிரியர் – ஐரீஸ் (கேரளா)

➢ தேர்தல் ஆணையர்கள் நியமனம்
- இந்திய தேர்தல் ஆணையர்களாக சுக்பீர் சந்து, ஞானேஷ் குமார் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- இந்திய தேர்தல் ஆணையம் – 25.01.1950

➢ இமாச்சலப்பிரதேசம்
- 18 முதல் 59 வயது வரையுள்ள பெண்களுக்கு மாதந்தோறும் ரூ.1,500 வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- இதற்கு இந்திராகாந்தி பியாரி பெஹ்னா சம்மன் நிதி யோஜானா என பெயரிட்ப்பட்டுள்ளது.

➢ ஹைதரபாத் விடுதலை தினம்
- ஆண்டுதோறும் செப்டம்பர் 17-ல் ஹைதரபாத் விடுதலை தினம் கொண்டாடப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது.
- 17.09.1948-ல் சர்தார் வல்லபாய் படேல் ஆபரேஷன் போலா என்ற திட்டத்தின் மூலம் ஹைதரபாத் மாநிலத்தை நிஜாம் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றுத் தந்தார்.
- இதனை நினைவு கூறும் விதமாக ஆண்டுதோறும் செப்டம்பர் 17-ல் ஹைதரபாத் விடுதலை தினம் கொண்டாடப்பட உள்ளதாக தெரிவித்துள்ளது.

➢ ஆந்திராவின் விசாகப்பட்டினத்தில் இந்தியா மற்றும் மலேசியா இரு தரப்பு கடல்சார் பயிற்சியானது சமுத்திர லக்ஸமனா (Samudra Laksamana) என்ற நடைபெற்றுள்ளது.

➢ சண்டிகர் மாநிலத்தில் 9 முதல் 18 வயது வரையிலான வளர்ந்து வரும் மாணவ மாணவியர்களின் திறமைகளை கண்டறிய கீர்தி திட்டம் (KIRTI Scheme) முன்னெடுக்கப்பட்டுள்ளது.
- KIRTI – Khelo India Rising Talent

- ராஜஸ்தானின் ஜோத்பூரில் இராணுவத்தின் முதல் அப்பாச்சி ஹெலிகாப்டர் படைப்பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.
    - அப்பாச்சி ஹெலிகாப்டர் (பறக்கும் பீரங்கி) அமெரிக்காவின் போயிங் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது.

- இந்தியத் தேர்தல் ஆணையத்தின் திட்டம் 414
    - இந்தியத் தேர்தல் ஆணையம் (EC) ஆனது இமாச்சலப் பிரதேசத்தில் “திட்டம் 414” என்ற சிறப்புப் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
    - இந்த திட்டம் கடந்த மக்களவைத் தேர்தலில் 60 சதவீதத்திற்கும் குறைவான வாக்குகள் பதிவான 414 வாக்குச் சாவடிகளில் அதிகபட்ச வாக்குப் பதிவினை பெறச் செய்வதை நோக்கமாகக் கொண்டு தொடங்கப்பட்டுள்ளது.

- இந்தியாவில் வேலைக்குச் செல்லும் பெண்கள் 37% அதிகரிப்பு
    - இந்தியாவின் 69.2 கோடி பெண்களில் 37 சதவீதம் பேர் வேலைக்குச் சென்று பணம் ஈட்டி வருவதாக தெரியவந்துள்ளது.
    - தெலங்கானா தலைநகர் ஹைதராபாத் 34 சதவீதத்துடன் முன்னணியிலும் புணே 33 சதவீதத்துடன், சென்னை 29 சதவீதத்துடன் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.



- உலகின் மகிழ்ச்சியான நாடுகள் பட்டியலில் பின்லாந்து முதலிடம் பிடித்துள்ளது. இந்தியா 126-வது இடத்தை பிடித்துள்ளது. இரண்டாம் இடம் மற்றும் மூன்றாம் இடங்கள் முறையே டென்மார்க் மற்றும் ஐஸ்லாந்து நாடுகள் பிடித்துள்ளன.
    - மொத்தம் 143 நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வுகளில் தலிபான்கள் நிர்வாகத்தில் உள்ள ஆப்கானிஸ்தான் கடைசி இடத்தில் உள்ளது.

- உலகின் முதல் ஓம் வடிவாக கோயில் ராஜஸ்தான் மாநிலம் ஜதன் என்ற கிராமத்தில் திறக்கப்பட்டுள்ளது.
    - கிட்டதட்ட 27 ஆண்டுகளாக இக்கோவில் கட்டப்பட்டு வருகிறது. இந்த கோவிலுக்கு 1995ம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு, கோவில் கட்டும் பணி நடந்து முடிந்துள்ளது.
- உணவு கழிவு குறியீட்டு அறிக்கை 2024 உணவு கழிவு குறியீட்டு அறிக்கை 2024 ஐ UNEP மற்றும் WRAP ஆகியவற்றால் வெளியிடப்பட்டது. உலகெங்கிலும் உள்ள குடும்பங்கள் 2022 இல் ஒரு நாளில் ஒரு பில்லியனுக்கும் அதிகமான உணவை வீணாக்குகின்றனர்.
    - 125 நாடுகளில் இந்தியா 111வது இடத்தில் உள்ளது.

- இந்திய அரசானது. இந்தியப் பெருங்கடலின் கடல்சார் நிலப்பரப்பில் உள்ள தனது அதிகார வரம்பிற்குள் உட்படாத அஃபனசி நிகிடின் சீமவுண்ட் என அழைக்கப்படும் கோபால்ட் நிறைந்த

பகுதிகளில் ஆய்வுகள் மேற்கொள்வதற்கான உரிமைகளைக் கோரி ஜமைக்காவில் உள்ள சர்வரதசக் கடற்படுகை ஆணையத்திடம் (ISBA) விண்ணப்பித்துள்ளது.

## விருதுகள்

- பேராசிரியர் அன்பழகன் விருது 76 பள்ளிகளுக்கு வழங்கப்பட உள்ளது.
    - பேராசிரியர் அன்பழகன் விருது: கற்றல், கற்பித்தல், ஆசிரியர் திறன் மேம்பாடு, மாணவர் வளர்ச்சி, தலைமைத்துவம் ஆகியவற்றில் பன்முக வளர்ச்சி சிறந்து விளங்கியதற்காக வழங்கப்படுகிறது.

- கவிக்கோ அறக்கட்டளை மற்றும் தமிழ் இயக்கம் சார்பில் கவிஞர் நெல்லை ஜெயந்தாவுக்கு கவிக்கோ விருது 2022 விருது வழங்கப்பட்டுள்ளது.
    - இவ்விருதானது கவிஞர் அப்துல் ரகுமான் நினைவாக சிறந்த கவிஞர்களுக்கு வழங்கப்படுகிறது.

- 2024-ஆம் ஆண்டிற்கான ஔவையார் விருதானது பாஸ்டினா சூசைராஜ் (எ) பாமா என்பவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
    - பாஸ்டினா சூசைராஜ் (எ) பாமா தலித் மக்களின் குரலாக ஒலித்து சமூக தொண்டாற்றி வருகிறது.
    - இவர் மனுஷி, வன்மம், கொண்டாட்டம், கருக்கு முதலிய நூல்களை எழுதியுள்ளார்.

- தமிழறிஞர்களுக்கு விருது
    - இவ்விருதானது செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித திட்ட இயக்கம் மூலம் தமிழறிஞர்களுக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.
    - தேவநேயப் பாவாணர் விருது 2023 - ப.அருளி
    - வீரமாமுனிவர் விருது 2023 - முனைவர் சச்சிதானந்தம்
    - நற்றமிழ்ப் பாவலர் விருது 2023 - அரிமாப் பாமகன், கௌதமன் நீல் ராசு

- பெண் குழந்தைகளின் பாலின உயர்விற்கு சிறப்பாக செயல்பட்ட 3 மாவட்ட நிர்வாகிகளுக்கு தமிழ்நாடு அரசு விருது வழங்கப்பட்டுள்ளது.
    - இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளரான விஷ்ணு சந்திரன்-க்கு தங்க பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.
    - காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியாளரான கலைச்செல்வி மோகன்-க்கு வெள்ளிப்பதக்கம் வழங்கப்பட்டுள்ளது
    - ஈரோடு மாவட்ட ஆட்சியாளரான இராஜகோபால் சுக்கரா-க்கு வெண்கலப்பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.




- எழுத்தாளர் கண்ணையன் தட்சிணாமூர்த்தி மொழிபெயர்ப்பு செய்த கருங்குன்றம் என்ற நூலுக்கு தமிழ் மொழிபெயர்ப்புக்கான சாகித்திய அகாதமி விருது வழங்கப்பட்டுள்ளது.
  - மமாங்தய் எழுதிய தி பிளாக் ஹில் (The Black Hill) என்ற நூலை கண்ணையன் தட்சிணாமூர்த்தி மொழிபெயர்ப்பு செய்துள்ளார்.
  - 24வது மொழிகளில் சாகித்திய அகாதமி விருது வழங்கப்பட்டு வருகிறது.

- ஆஸ்கர் விருது 2024 – லாஸ் ஏஞ்சல்
  - சிறந்த திரைப்படம் – ஓப்பன் ஹைமர்
  - சிறந்த சர்வதேச திரைப்படம் – தி ஸோன் ஆஃப் இன்ட்ரஸ்ட் (பிரிட்டன்)
  - சிறந்த ஆவணத் திரைப்படம் – 20 டேஸ் இன் மரியுபோல்
  - சிறந்த இயக்குநர் – கிறிஸ்டோபர் நோலன் (ஓப்பன் ஹைமர்)
  - சிறந்த நடிகை – எம்மா ஸ்டோன் (புவர் திங்ஸ்)
  - சிறந்த நடிகர் – கீலியன் மர்ஃபி (ஓப்பன் ஹைமர்)
  - இவ்விழாவில் 7 விருதுகளை ஓப்பன் ஹைமர் திரைப்படமும், 4 விருதுகளை புவர் திங்க்ஸ் திரைப்படமும் பெற்றுள்ளன.

- உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானியான சவுமியா சுவாமிநாதனுக்கு யஷ்வந்த் ராவ் சவ்வான் தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது.
  - எச்.ஐ.வி. காசநோய் உள்ளிட்ட நோய்களுக்கான ஆராய்ச்சியில் சிறப்பாக செயல்பட்டதற்காக இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

- புகழ்பெற்ற இந்திய எழுத்தாளரான அமிதவ் கோஷ்-க்கு எராஸ்மஸ் பரிசு 2024 வழங்கப்பட்டுள்ளது.
  - நெதர்லாந்தின் பிரீமியம் எராஸ்மியனம் அறக்கட்டளை சார்பில் இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.
  - இவர் 2018-ல் ஞானபீட விருது (இலக்கிய உயரிய விருது) பெற்றுள்ளார்.

- சங்கீத கலாநிதி விருது:
  - இசை உலகில் மிகப் பெரிய கவுரவமாக கருதப்படும் மியூசிக் அகாடமியின் "சங்கீத கலாநிதி" விருதுக்கு பிரபல கர்னாடக இசை வாய்ப்பாட்டு கலைஞர் டி.எம்.கிருஷ்ணா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
  - கர்னாடக இசையை அதன் பாரம்பரிய பெருமை குறையாமல், சமூகத்தின் எளிய, சாமானிய மக்களுக்கும் கொண்டு சேர்த்தவர். இசை குறித்து பல்வேறு புத்தகங்களை ஆங்கிலத்தில் எழுதியிருப்பவர்.

- சரஸ்வதி சம்மான் விருது

- கேரளத்தைச் சேர்ந்த கவிஞரும் எழுத்தாளருமான பிரபா வர்மாவுக்கு 2023-ஆம் ஆண்டுக்கான சரஸ்வதி சம்மான் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- அவர் இயற்றிய ' ரௌத்ர சாத்விகம் என்ற கவிதை நூலுக்காக இந்த விருது வழங்கப்படுவதாக விருதை வழங்கும் கே.கே.பிர்லா அறக்கட்டளை தெரிவித்துள்ளது.
- கடந்த ஆண்டுக்கான சரஸ்வதி சம்மான் விருது தமிழ் எழுத்தாளர் சிவசங்கரிக்கு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

➢ பூட்டான் நாட்டின் மிக உயரிய விருதான 'ஆர்டர் ஆஃப் ட்ருக் கியால்போ' விருது, பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டுள்ளது.

- இந்த விருதை பெறும் ஐந்தாவது நபர் & இந்த விருதை பெறும் முதல் பூட்டானியர் அல்லாதவர் என்ற வரலாற்றை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி படைத்துள்ளார்.

## நியமனங்கள்

➢ தேசிய பாதுகாப்பு படையின் தலைமை இயக்குநராக தல்ஜித் சிங் சௌத்ரி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

- தேசிய பாதுகாப்பு படை – 1986

➢ எல்லையோர காவல் படையின் (BSF) முதல் ஸ்னைப்பர் வீராங்கனையாக சுமன் குமாரி தேர்வாகியுள்ளார்.

➢ அனுராக் அகர்வால் பாராளுமன்ற பாதுகாப்பு தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

➢ தமிழக தேர்தல் ஆணையராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.



- மாநில தேர்தல் ஆணையம் – 243K, 243ZA
- தேர்தல் ஆணையர் பதவிக்காலம் – 5 ஆண்டுகள் (அ) 65 வயது வரை
- தேர்தல் ஆணையம் விதி – 324 to 329
- தேர்தல் ஆணையம் – 24.01.1950
- தேசிய வாக்காளர் தினம் – ஜனவரி 25

➢ தேசிய புலனாய்வு அமைப்பின் (என்ஐஏ) தலைமை இயக்குநராக மகாராஷ்டிராவைச் சேர்ந்த ஐபிஎஸ் அதிகாரி சதானந்த் வசந்த் டேட் நியமிக்கப்பட்டுள்ளார்.

➢ யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் (யுபிஎஸ்சி) இயக்குநராக நியமனம் செய்ய ஹன்ஷா மிஸ்ரா (ஐஏ&ஏஎஸ்) தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

DHEERAN IAS ACADEMY

# வெளிநாட்டு நிகழ்வுகள்

- பாகிஸ்தானின் 24வது பிரதமராக ஷாபாஸ் ஷெரீஃப் பதவியேற்றுள்ளார்.

- இந்தோனேசியாவின் பாலீ தீவில் ஐ கஸ்தி பகஸ் ஸ்டேட் இந்து யுனிவர்சிட்டி உருவாக்கப்பட்டுள்ளது.
    - இது இந்தோனேசியாவின் முதல் இந்து பல்கலைக்கழகம் ஆகும்.



- உலக பணக்காரர்கள் பட்டியலில் ஜெஃப் பெசோஸ் () முதலிடம் பிடித்துள்ளார்.
    - எலான் மஸ்க் இரண்டாம் இடத்தினை பிடித்துள்ளார்.

- ஸ்வீடன் நேட்டோ கூட்டமைப்பில் 32வது உறுப்பு நாடாக இணைந்துள்ளது.
    - இரண்டாம் உலகப் போருக்கு பிறகு அமெரிக்காவின் தலைமையில் 31 நாடுகள், ஒன்றிணைந்து அமைத்த ராணுவ கூட்டமைப்பு நேட்டோ (North Atlantic Treaty Organization) எனப்படும்.

- செக்குடியரசினை சேர்ந்த கிறிஸ்டினா பிஸ்கோவா உலக அழகி பட்டத்தை வென்றுள்ளார்.

- கைப்பேசி உற்பத்தி
    - உலக கைப்பேசி உற்பத்தியில் சீனா முதலிடமும், இந்தியா இரண்டாவது இடமும் பிடித்துள்ளன.
- பனாமா நாடானது சர்வதேச சோலார் கூட்டணியில் 97வது நாடாக இணைந்துள்ளது.

- சீனாவின் ஒருங்கிணைந்த பகுதி அருணாசல்
    - அருணாசல பிரதேசத்தை தெற்குபெத் எனக் கூறும் சீனா, அதற்கு ஷாங்னான் எனப் பெயரிட்டுள்ளது.

DHEERAN IAS ACADEMY

- ஆபரேஷன் இந்திராவதி என்பது கரீபியன் நாடான ஹைட்டியில் இருந்து இந்திய நாட்டினரை மீட்பதற்காக இந்திய அரசாங்கத்தால்மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை ஆகும்.
    - நெருக்கடி நிலையைத் தொடர்ந்து ஹைதியில் இருந்து வெளியேறும்படி பல நாடுகள் வலியுறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

- அமுலின் தனது முதல் சர்வதேச செயல்பாட்டை அமெரிக்காவில் தொடங்கவுள்ளது.
    - அமுல், வர்கீஸ் குரியன் என்பவரால் டிசம்பர் 14, 1946 அன்று குஜராத்தில் நிறுவப்பட்டது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- 2028ஆம் ஆண்டில் இந்தியா சார்பில் விண்வெளியில் ஆய்வு மையமானது பாரதிய அந்தரிஷா நிலையம் (Bharatiya Space Station) என்னும் பெயரில் அமைக்கப்பட உள்ளதாக இஸ்ரோ (ISRO) தலைவர் சோம்நாத் தெரிவித்துள்ளார்.
    - ISRO – Indian Space Research Organisation – 15.08.1969
- குஜராத்தின் காசிராவில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட முதல் ஹைட்ரஜன் மின்னாற்பகுப்பு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

- நீர் மூழ்கிக் கப்பல்களை தாக்கி அழிக்கும் திறன் வாய்ந்த எம்எச் 60 ஆர் ஹீ ஹாக் (MH 60 R He Hawk) ஹெலிக்காப்டர் இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டுள்ளது.
    - இந்த ஹெலிக்காப்டர் கொச்சியின் ஐஎன்எஸ் கருடா தளத்தில் இந்திய கடற்படையில் இணைய உள்ளது.

- துருப்பிடிக்காத எஃகு துறையில் இந்தியாவின் முதல் பச்சை ஹைட்ரஜன் ஆலையாது ஹரியானாவில் தொடங்கப்பட்டுள்ளது.
    - நோக்கம்: கார்பன் வெளியேற்றத்தை ஆண்டுக்கு 2,700 மெட்ரிக் டன்கள் மற்றும் 20 ஆண்டுகளில் 54,000 டன்கள் $CO_2$ வெளியேற்றத்தைக் குறைப்பது.
    - பச்சை ஹைட்ரஜன் என்றால் என்ன?
        - பசுமை ஹைட்ரஜன் நீரின் மின்னாற்பகுப்பைப் பயன்படுத்தி புதுப்பிக்கத்தக்க ஆற்றலால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் மூலம் தயாரிக்கப்படுகிறது.

- கூகுள் நிறுவனமானது ஜீனி என்னும் கேமிங் AI தளத்தினை உருவாக்கியுள்ளது.
- தொலைத்தொடர்பு சேவைகளை தவறாக பயன்படுத்துவதை தடுக்கும் சாக்ஷு புதிய வசதியானது சஞ்சார் ஷாதி இணையதளத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- இந்தியாவின் நிறுவப்பட உள்ள 3 செமி கண்டக்டர் ஆலையில் முதல் ஆலையானது குஜராத், தோலேராவில் அமைய உள்ளது.
    - குஜராத் 2 ஆலைகளும், ஒடிசாவில் ஒரு ஆலையும் அமைய உள்ளது.
- திரவ இயற்கை எரிவாயு நிறுவனம்
    - கெயில் நிறுவனம் சார்பில் இந்தியாவின் மிகச்சிறிய திரவ இயற்கை எரிவாயு நிறுவனம் மத்தியபிரதேசத்தின் விஜயப்பூர் நகரில் துவங்கப்பட்டுள்ளது.
- இந்தியாவின் முதல் AI ஆசிரியை கேரளாவில் நியமிகப்பட்டுள்ளது.
    - இதற்கு ஐரீஸ் என பெயரிடப்பட்டுள்ளது.
    - தென்னிந்தியாவின் முதல் AI செய்தி வாசிப்பாளர் சௌந்தர்யா – கர்நாடகா
    - இந்தியாவின் முதல் AI செய்தி வாசிப்பாளர் - லிசா –ஒடிசா



- ஏவுகணை சோதனை வெற்றி
    - ஒரே நேரத்தில் பல இலக்குகளை தனித்தனியாக தாக்கும் திறனுடைய அக்னி 5 ஏவுகணை சோதனை வெற்றி பெற்றுள்ளது.
    - திவ்யாஸ்திரா என்ற திட்டத்தின் எம்ஐஆர்வி (MIRV) தொழில்நுட்பத்தின் கீழ் அக்னி 5 ஏவுகணை உருவாக்கப்பட்டுள்ளது.
    - MIRV – Multiple Independently Targetable Re-entry Vehicle)

- இந்தியாவின் முதல் MH-60R சிஹாக் ஹெலிக்காப்டரானது கேரளாவின் கொச்சியில் இயக்கப்பட்டுள்ளது.

- இந்திய கப்பற்படையில் ஐஎன்எஸ் அக்ரே மற்றும் ஐஎன்எஸ் அக்ஷ்ய் கப்பல்கள் இணைக்கப்பட்டுள்ளன.
    - இக்கப்பல்கள் கொல்கத்தா கார்டன் ரீச் ஷிப் பில்டர் மற்றும் என்ஜீனியர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது.

- இந்தியாவின் முதல் பியூச்சர்லேப் (Futurelab) கேரள மாநிலத்தில் திறக்கப்பட்டுள்ளது.

- சீனா நிலவை ஆராய்வதற்காக டிஆர்ஓ – ஏ & பி இரு செயற்கைக்கோள்களை நிலவுக்கு அனுப்பிய திட்டம் தோல்வி அடைந்துள்ளது.
    - இரு செயற்கைக்கோள்களும் யுயன்ஷெங்-எஸ் ராக்கெட் மூலம் விண்ணுக்கு அனுப்பப்பட்டது.

- மீத்தேன் உமிழ்வினை கண்காணித்து அளவிடும் மீத்தேன்சாட் செயற்கைக்கோள் விண்ணிற்கு அனுப்பப்பட்டுள்ளது.
    - நியூசிலாந்து விண்வெளி மையம் மற்றும் அமெரிக்காவின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிதியம் இணைந்து உருவாக்கியுள்ளது.

- நோக்டிஸ் எரிமலை – செவ்வாய்க் கிரகம்
    - செவ்வாய்க் கிரகத்தில் ‘பிரம்மாண்டமான’ எரிமலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதற்கு ‘நோக்டிஸ் எரிமலை’ என்று பெயரிடப் பட்டுள்ளது.
    - இந்த எரிமலை 29,600 அடி உயரமும் , சுமார் 450 கிலோமீட்டர் அகலமும் கொண்டது.

- திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு மூலம் இயங்கும் இந்தியாவின் முதல் பொது போக்குவரத்துக்கான பேருந்து ஆனது மகாராஷ்டிரா மாநில சாலைப் போக்குவரத்துக் கழகத்தினால் அறிமுகப் படுத்தப் பட்டு இயக்கப்பட்டது.

- இந்தியாவின் முதல் மறு பயன்பாட்டு ஏவு வாகனமான (Reusable Launch Vehicle (RLV)), ‘புஷ்பக் (Pushpak)’ விண்கலத்தின் சோதனையை கர்நாடகாவில் உள்ள சித்ரதுர்காவில் வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளது இஸ்ரோ.

- ஸ்விட்சர்லாந்தைச் சேர்ந்த IQAIR என்ற நிறுவனம், உலகில் 134 நாடுகளில் காற்று தரத்தை ஆராய்ந்து 'உலக காற்று தர அறிக்கை 2023' என்ற தரவரிசை பட்டியலை அண்மையில் வெளியிட்டுள்ளது.
    - இதில் மிகவும் மாசுபட்ட முதல் 50 நகரங்களில் (Metropolitan) 42 நகரங்கள் இந்தியாவில் உள்ளன என்ற அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளது.
    - இதில் மிகவும் மாசுபட்ட முதல் 50 நகரங்களில் (Metropolitan) 42 நகரங்கள் இந்தியாவில் உள்ளன.
    - மாசுபட்ட தலைநகரங்கள் பட்டியலில் டெல்லி முதலிடத்தில் உள்ளது.

- பாஷாநெட் போர்டல்
    - MeitY மற்றும் NIXI ஆகியவை பாஷாநெட் போர்டலை ஆகியவை பாஷாநெட் போர்டலை வெளியிட்டன.
    - இந்த முயற்சியானது இந்தியாவில் டிஜிட்டல் உள்ளடக்கம் மற்றும் மொழியியல் பன்முகத்தன்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- கலாம் – 250
    - முன்னணி விண்வெளி-தொழில்நுட்ப நிறுவனமான ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ், இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) உந்துவிசை சோதனை தளத்தில் கலாம்-250 ஐ வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.
    - கலாம்-250 என்பது விக்ரம்-1 விண்வெளி ஏவு வாகனத்தின் நிலை-2 ஆகும்.

- பஞ்சாபில் உள்ள சட்லெஜ் ஆற்று மணலில், மின்னணு உதிரிபாகங்கள் தயாரிப்பதில் பயன்படுத்தப்படும் டான்டலம் என்ற அரிய உலோகம் இருப்பதை ரோபார் இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் (ஐஐடி) ஆராய்ச்சியாளர்கள் குழு கண்டறிந்துள்ளது

DHEERAN IAS ACADEMY

## விளையாட்டு நிகழ்வுகள்

- 4வது கேலோ இந்தியா பல்கலைக் கழக விளையாட்டு போட்டியில் சண்டிகர் பல்கலைக்கழக அணி ஒட்டு மொத்த சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

- 2024ஆம் ஆண்டிற்கான ஒலிம்பிக்போட்டியானது பிரான்ஸின் பாரிஸ் நகரில் நடைபெற உள்ளது.
    - 2028ஆம் ஆண்டிற்கான ஒலிம்பிக்போட்டியானது அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற உள்ளது.
    - 2020ஆம் ஆண்டிற்கான ஒலிம்பிக்போட்டியானது ஜப்பானின் டோக்கியோ நகரில் நடைபெற்றது.



- இந்தியாவின் பாரா ஒலிம்பிக் குழுவின் தலைவராக தேவேந்திர ஜஜாரியா நியமிக்கப்பட்டுள்ளார்.

- ஹாக்கி இந்தியா விருதுகள் 2023
  - சிறந்த இந்திய ஹாக்கி வீரர்களைக் கொண்டாடும் வகையில் ஹாக்கி இந்தியா 6 வது ஆண்டு விருதுகள் 2023 புது தில்லியில் நடைபெற்றது

## முக்கிய தினங்கள்

- உலக வனவிலங்கு தினம் (World Wildlife Day) – Mar 03
  - கருப்பொருள்: Connecting People and Planet: Exploring Digital

- சர்வதேச மகளிர் தினம் (International Woman's Day) – மார்ச் 08
  - கருப்பொருள்: Invest in Women: Accelerate Progress

- சர்வதேச கணித தினம் (International Day of Mathematics) – மார்ச் 14

- சர்வதேச பை தினம் (International Pie Day) – மார்ச் 14




- உலக நுகர்வோர் உரிமைகள் தினம் (World Consumer Rights Day) – மார்ச் 15
  - கருப்பொருள்: Fair and responsible AI for Consumers.

- தேசிய தடுப்பூசி தினம் (National Vaccination Day) – மார்ச் 16
  - கருப்பொருள்: Vaccines work for all.
  - 1995-ல் போலியோ ஒழிப்பு திட்டம் இந்தியாவில் தொடக்கப்பட்டதன் நினைவாக அனுசரிக்கப்படுகிறது.

- உலக தண்ணீர் தினம் – மார்ச் 22
  - 1992 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாட்டிற்கான மாநாட்டில் இருந்து அனுசரிக்கப்பட்டுவருகிறது.
  - இந்த ஆண்டுக்கான கருப்பொருள்: அமைதிக்காக தண்ணீரைப் பயன்படுத்துதல் /Leveraging water for Peace



DHEERAN IAS ACADEMY